சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - 50 உழவர் சந்தைகளுக்கு உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று (FSSAI Certificate) பெறுதல்- 25 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்த அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேவி3) துறை

அரசாணை (நிலை) எண். 92

நாள்: 18.05.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
வைகாசி திங்கள் 4 ஆம் நாள்

படிக்கப்பட்டது:

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கடிதம் எண் உ.ச.2/ 11426/2023, நாள்.12.04.2023

ஆணை:

2023-2024-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> ". . .50 உழவர் சந்தைகளுக்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று (FSSAI Certificate) பெற வரும் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் அவர்கள், தமிழ்நாட்டில் மொத்தம் 183 உழவர் சந்தைகள் செயல்படுகின்றன என்றும் அவற்றில் இதுவரை 21 உழவர் சந்தைகளுக்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றும், உணவு பாதுகாப்பு தர ஆணையத்தின் சான்றிதழை பெற கீழ்க்காணும் வழிமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்:

i. உழவர் சந்தை தேர்ந்தெடுத்தல் மற்றும் பதிவு செய்தல்

உழவர் சந்தை தேர்ந்தெடுத்தல் மற்றும் பதிவு செய்தல் பணியினை உள்ளூர் உணவு ஆணையத்தின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மேற்கொள்வார்கள்.

ii. **முதற்கட்ட தணிக்கை**

மாநில உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் அலுவலர்கள் மற்றும் FSSAI-யில் பட்டியலிடப்பட்ட தணிக்கை நிறுவனம் ஆகியவற்றினால் சந்தை கூட்டாக ஆய்வு செய்யப்படும்.

iii. **பயிற்சி மற்றும் இணக்க அறிக்கை சமர்ப்பித்தல்**

FSSAI-யில் பட்டியலிடப்பட்ட தணிக்கை நிறுவனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக பயிற்சி நடத்தப்படும். முதற்கட்ட ஆய்வின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகள் 30 நாட்களுக்குள் உழவர்சந்தையின் நிர்வாக அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட மாநில உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் அலுவலர்கள் உறுதி செய்வர்.

iv. **இறுதி தணிக்கை**

முதற்கட்ட தணிக்கையினை மேற்கொண்ட FSSAI-யில் பட்டியலிடப்பட்ட தணிக்கை நிறுவனத்தின் மூலம் இறுதி தணிக்கை மேற்கொள்ளப்படும். மதிப்பீட்டு அறிக்கை மாநில உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறைக்கு அனுப்பப்படும். பின்னர், மாநில உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையால் சரிபார்க்கப்பட்டு சுத்தமான மற்றும் பசுமையான பழங்கள் மற்றும் காய்கறிகள் சந்தைக்கான சான்றிதழ் (FSSAI Certificate) பெறுவதற்கான இறுதி அறிக்கை சந்தையின் தகுதி பற்றிய குறிப்புகளுடன் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்திற்கு (FSSAI) அனுப்பப்படும்.

v. **சான்றிதழ் வழங்குதல்**

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் அறிக்கையை ஆய்வு செய்து, தகுதியானதாகக் கண்டறியப்பட்டால், சுத்தமான மற்றும் பசுமையான பழங்கள் மற்றும் காய்கறிகள் சந்தையாக சான்றளித்து சான்றட்டைகள் வழங்கப்படும். இச்சான்றிதழ், வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருடத்திற்கு செல்லுபடியாகும்.

3. மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், தனது கடிதத்தில், இத்திட்டம் கீழ்க்காணும் 50 உழவர் சந்தைகளில் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்:

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | ஆர்.எஸ் புரம் |
| 2. | கோயம்புத்தூர் | சிங்காநல்லூர் |
| 3. | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி |
| 4. | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் |
| 5. | கடலூர் | கடலூர் |
| 6. | கடலூர் | விருத்தாசலம் |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை |
|---|---|---|
| 7. | தருமபுரி | பென்னாகரம் |
| 8. | தருமபுரி | பாலக்கோடு |
| 9. | ஈரோடு | சம்பத்நகர் |
| 10. | ஈரோடு | பெரியார் நகர் |
| 11. | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |
| 12. | கரூர் | குளித்தலை |
| 13. | கிருஷ்ணகிரி | ஓசூர் |
| 14. | மதுரை | சொக்கிகுளம் |
| 15. | மதுரை | பழங்கானத்தம் |
| 16. | மதுரை | ஆனையூர் |
| 17. | நாமக்கல் | திருச்செங்கோடு |
| 18. | நாமக்கல் | குமாரபாளையம் |
| 19. | நீலகிரி | கூடலூர் |
| 20. | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 21. | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை |
| 22. | சிவகங்கை | சிவகங்கை |
| 23. | சிவகங்கை | திருப்பத்தூர் |
| 24. | தென்காசி | சங்கரன்கோவில் |
| 25. | தென்காசி | தென்காசி |
| 26. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 27. | தஞ்சாவூர் | கும்பகோணம் |
| 28. | தேனி | தேனி |
| 29. | தேனி | கம்பம் |
| 30. | தேனி | ஆண்டிபட்டி |
| 31. | தேனி | சின்னமானூர் |
| 32. | திருநெல்வேலி | என்.ஜி.ஒ காலனி |
| 33. | திருநெல்வேலி | மேலப்பாளையம் |
| 34. | திருப்பத்தூர் | வாணியம்பாடி |
| 35. | திருப்பூர் | உடுமலைபேட்டை |
| 36. | திருப்பூர் | திருப்பூர் (வடக்கு) |
| 37. | திருப்பூர் | திருப்பூர் (தெற்கு) |
| 38. | திருப்பூர் | தாராபுரம் |
| 39. | திருவாரூர் | திருத்துறைப்பூண்டி |
| 40. | திருவண்ணாமலை | செங்கம் |
| 41. | திருவண்ணாமலை | போளூர் |
| 42. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 43. | தூத்துக்குடி | கோவில்பட்டி |
| 44. | திருச்சி | அண்ணாநகர் |
| 45. | திருச்சி | துறையூர் |
| 46. | திருச்சி | முசிறி |
| 47. | வேலூர் | வேலூர் |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை |
|---|---|---|
| 48. | வேலூர் | காட்பாடி |
| 49. | வேலூர் | குடியாத்தம் |
| 50. | வேலூர் | காகிதப்பட்டறை |

4. எனவே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் தனது கருத்துருவில், மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்த கீழ்க்கண்ட பொருண்மைகளுக்கு ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்:-

i. இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி ரூ.25.00 இலட்சத்தை புதிய கணக்குத் தலைப்பில் மாநில நிதியிலிருந்து வழங்குதல்.

ii. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்களுக்கு, அனுமதியளிக்கப்பட்ட தொகையை காசாக்கி தலைமை செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) அவர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி அளித்தல்.

iii. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் அந்தந்த மாவட்ட உள்ளூர் உணவு ஆணையத்தின் வழிகாட்டுதலின் கீழ் சம்பந்தப்பட்ட மாவட்ட துணை வேளாண் இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் திட்டத்தைச் செயல்படுத்துதலுக்கு அனுமதி அளித்தல்.

iv. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் ஒதுக்கப்பட்ட நிதி வரம்பிற்குள் தேவைப்பட்டால் இடங்களை மாற்றுவதற்கு அனுமதி அளித்தல்.

v. தொடர் செலவுகள் மற்றும் புதுப்பிக்கும் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியில் இருந்து ஈடுசெய்ய அனுமதி அளித்தல்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, 50 உழவர் சந்தைகளுக்கு உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று (FSSAI Certificate) பெறுவதற்காக நிருவாக ஒப்புதல் மற்றும் இப்பணிக்கு மாநில நிதியின் கீழ் 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது .

6. மேலே பத்தி 5 ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 விற்பனை தரக்கட்டுப்பாடு – 102 தரம் பிரித்தல், தரக்கட்டுப்பாட்டு வசதிகள்- மாநிலச் செலவினங்கள் – AR உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று (FSSAI Certificate) பெறுதல் – 333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 03 சிறப்புப் பணி.

(IFHRMS DPC : 2435 01 102 AR 333 03)

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.I)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-24-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொ.I/ வேளாண்மை-உழவர் நலன்) துறைக்கு அனுப்பி வைக்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 6-ல் தோற்றுவிக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பினைத் தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை காசாக்கி தலைமைச் செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB)-க்கு வழங்குவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. சம்பந்தப்பட்ட மாவட்ட உள்ளூர் உணவு ஆணையத்தின் வழிகாட்டுதலின் கீழ் அந்தந்த மாவட்ட துணை வேளாண் இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது

11. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணை வேளாண்மை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) மூலம் அந்தந்த மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின்கீழ் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

12. ஒதுக்கப்பட்ட நிதி வரம்பிற்குள் தேவைப்பட்டால் இடங்களை மாற்றுவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

13. மேலும், இப்பணிகள் குறித்த தொடர் செலவுகள் மற்றும் புதுப்பிக்கும் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியில் இருந்து ஈடுசெய்ய வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

14. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா. எண்.19193/2023, நாள்.16.05.2023 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.0115 (நூற்று பதினைந்து) (IFHRMS ASL No. 2023050115)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
முதன்மை கணக்காய்வுத் தலைவர்,(A&E, / Audit / AAD / G&SSA / E&RSA), சென்னை-18.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
முதுநிலை செயலர் / செயலர், விற்பனைக்குழு (தொடர்புடையது)
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
தமிழ்நாடு. மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)

நகல்
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை-உழவர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (OP.3 / B&P) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

B. [signature] 19.05.2023
பிரிவு அலுவலர்